'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVII ஏப்ரல் கி.பி. 2026 சான்று : 196










# தவக்கால களப்பணிகள்










**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே. உறுதியோடு இருங்கள்; நிலையாய் நில்லுங்கள். ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள் (1கொரி 15:58) என்று உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். உற்சாகப்படுத்துகிறேன். உங்களுக்காகத் தொடர்ந்து இறைவேண்டல் செய்கிறேன்.

இந்த இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே பெருமகிழ்ச்சி கொள்கிறேன். உங்களில் பலர் மிகுந்த ஆர்வத்தோடு, உற்சாகத்தோடு களப்பணி புரிந்தீர்கள். அத்தனை பேருக்கும் அதற்காக தொடர்ந்து செபித்த, அதற்காக உழைத்த அத்தனை பேருக்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இயேசு கிறிஸ்து ஆண்டவரின் உயிர்ப்பு நினைவுப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமடல் 15 ஆம் பிரிவு உயிர்த்தெழுதலைப் பற்றியதாகும். மூன்று உயிர்த்தெழுதல்கள் உண்டு. ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்போது உயிர் பெறுவர் என்று பவுல் கூறுகிறார். 1) கிறிஸ்துவே முதலில் உயிர் பெற்றார். 2) கிறிஸ்துவின் வருகையின்போது அவரை சார்ந்தோர் உயிர் பெறுவர் (1 கொரி 15:23) 3) இறந்த அனைவரும் உயிர் பெறுவர் (திவெ 20:12,13).

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பினாலே மீட்பு முழுமை அடைகிறது என்ற ஒப்பற்ற இறை உண்மையை விளக்குறார் புனித பவுல். இது நான்கு கடைசி நிகழ்வுகள் மூலம் உயிர்ப்பின் ஆசிகளைப் பெறுகிறோம் என்று எடுத்துரைக்கிறார்.

**1. கடைசித்தோற்றம்:**

எல்லாருக்கும் கடைசியாகக் காலம் தப்பி பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார் (1 கொரி 15 :6 )இயேசு ஆண்டவர் (1கொரி 15 :4 -7) உயிர் பெற்று எழுந்தவுடன் கேபா, பன்னிரு சீடர்கள், 500க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகள், யாக்கோபு மற்றும் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றிய பிறகு கடைசியில் தனக்கும் தோன்றினார் என்று புனித பவுல் கூறுகிறார். தனது தகுதியின்மையையும் அதே நேரத்தில் கடவுளின் அருளால் இது நடந்தது என்றும் தொடர்ந்து எழுதுகிறார். தான் திருத்தூதர்களில் கடையவன் என்றும் திருத்தூதர் என்று அழைக்கப் பெற தகுதியற்றவன் என்றும் கடவுளின் அருளால் இந்த நிலையில் இருக்கிறேன் என்றும் தெளிவாக எடுத்துரைக்கிறார். நமது தகுதியின்மையை உணர்ந்து, கடவுளின் அருளை நிரந்தரமாக பெற்றுக்கொள்வதும் அந்த அருளை வீணாக்காமல் மிகுதியாக பாடுபட்டு உழைப்பதும் அந்த உழைப்பிற்கான ஆற்றல் கடவுளின் அருளால் கிடைக்கிறது என்பதை உணர்ந்து வாழ்வதுதானே முதல் ஆசியாக இங்கு விளக்கப்படுகிறது.

ங்களின் காரணமாக இறந்தவர்களாய் இருந்த நாம் .அன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார். நாம் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே இதனால் கிடைக்கும் மாபெரும் ஆசி என்ன? நாம் கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார் என்று தெளிவாக கூறுகிறார். இந்த உயிர்ப்பினால் விண்ணகம் சார்ந்த ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம் மீது பொழிந்துள்ளார் என்றும் அழுத்தமாக குறிப்பிடுகிறார். இதைவிட வேறென்ன ஆசிகள் நமக்கு வேண்டும்?

**2. கடைசிப் பகைவன் அழிக்கப்படுதல்:**

விண்ணகப் பிறப்பு என்பது நம்பிக்கையாளனின் இவ்வுலக இறுதி நாள். அது அழியாத இன்ப நாள். இனி இறக்காத படி இறக்கிறோம். அதாவது நிலையாக வாழ விண்ணகத்தில் பிறக்கிறோம். இந்த உலகில் ஊனியல்பின் இச்சைகளோடு தொடர் போராட்டம் (கலா 5 :17) அவரது உயிர்ப்பினால் அவற்றை மேற்கொள்ள அருள் கிடைத்திருக்கிறது. ஆற்றல் கிடைத்திருக்கிறது (உரோ 6:10- 14). கிறிஸ்துவின் இறப்பு மூலம் பாவத்தின் தண்டனையிலிருந்து மீட்பு கிடைக்கிறது (1 கொரி 15: 3,4). கிறிஸ்துவின் உயிர்ப்பு மூலம் பாவத்தின் வல்லமையிலிருந்து மீட்பு கிடைக்கிறது. எல்லா பகைவர்களின் மீதும் வெற்றி இந்த உயிர்ப்பினால் நிகழ்கிறது. எனவே தான் இந்த உயிர்ப்பை நாம் உச்ச நிலையில் கொண்டாடி உரிமை ஆக்க வேண்டும். கிறிஸ்துவுடன் நாம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்து இருந்தால் எல்லா மக்களையும் விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம்(1கொரி15:19).

**3. கடைசி ஆதாம்:**

இயேசு கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு நம்மை கொண்டு செல்வதே கடவுளின் இறுதியான நோக்கமாகும் (2கொரி 15:45,49). கண்டிப்பாக நம் நிறைவான வளர்ச்சி விண்ணை சார்ந்தவரான கிறிஸ்துவின் சாயலை பெறுவது தான் என்பதை உணர்ந்து வாழ்வோம். புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கு ஏற்ப புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாறு நீங்கள் கடவுளை முழுமையாய் அறிய முடியும் (கொலோ 3:10) என்று புனித பவுல் கூறுகிறார். உடல் அழிந்து கொண்டிருந்தாலும் கடவுளின் சாயலாய் படைக்கப்பட்ட நாம் நமது உள்ளார்ந்த இயல்பு நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பட, மனம் தளராமல் கடவுளின் அருளுக்குள் அர்ப்பணிக்க வேண்டும் (2 கொரி 4: 16) கடைசி ஆதாமின் வருகை பயனற்று போய்விடக்கூடாது.

**4. இறுதி எக்காளம்:**

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் மாட்சிமிக்க அதே மாற்றுரு. அழியாமையை அணிந்துள்ள. சாகாமையை அணிந்துள்ள மாற்றுரு. நம்

ஒவ்வொருவருக்கும் இறுதி எக்காளம் முழங்கும் போது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் கொடுக்கப்படும் (1கொரி 15 :50- 53) கடவுளின் மாட்சியைப் பெற ஆண்டவர் பால் திரும்ப வேண்டும். அப்போது ஆண்டவரின் மாட்சியைப் பிரதிபலிப்போம். இவ்வாறு மேன்மேலும் மாட்சி பெற்று அவர் சாயலாக மாற்றமடைவோம் (2கொரி 3:18)எனவே உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவோடு நெருங்கி ஒன்றித்து வாழும் போது இங்கு குறிப்பிடப்படும் நான்கு விதமான ஆசிகளை உறுதியிலும் உறுதியாகப் பெறுவோம்.

தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டுமென கடவுள் முன் குறித்து வைத்தார். தாம் முன் குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். தாம் அழைத்தோரை தமக்கு ஏற்புடையவராக்கி இருக்கிறார். தமக்கு ஏற்புடையரானவரை தம் மாட்சியில் பங்கு பெற செய்தார் (உரோ 8 :29, 30) என்ற புனித பவுலின் வரிகளை தியானித்து, உயிர்ப்பின் ஆசிகளை நிறைவாக பெற ஒருவர் ஒருவருக்காய் செபிப்போம்

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## மார்ச் 2026 புதிய பணியாளர்கள் பயிற்சி

★ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 1.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி A. அடைக்கலம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 1.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 3 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 7.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 18 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரி புஷ்பம், நற்பணி X. லூர்துமேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 8.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. சேவியர், நற்பணி பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 8.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி ஆரோக்கியமேரி, நற்பணி ஜான்சிமேரி, நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 15.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 11 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை சகோ. செலின்பிரபா, நற்பணி A. அமலோற்பவ ஆரோக்கியராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 15.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 6 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. ரெபேக்கா, நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 15.03.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாய தமிழ் செல்வி, நற்பணி M. விசுவாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.



## கடந்த மாதச் செயல்பாடுகள்

✸01.03.2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி S.சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்

✸01.03.2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி A.R.சூசைராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✸04.03.2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 21 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை Sr. செலின் பிரபா, நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி ஜெயசீலி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸04.03.2026 அன்று அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 70 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி ஜோன்ஸ் மேரி, நற்பணி A. அடைக்கலம், நற்பணி ஜோசப் ஆரோக்கியராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸8.03.2026 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்

✸15.03.2026 அன்று அம்மாபேட்டை, புனித வளனார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர்வழிநடத்தினார்கள்.

✸15.03.2026 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. மரிய

கிரகோரி, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✱22.02.2026 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R. சூசைராஜ் , நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✱22.02.2026 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி. S. பால்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱27, 28.03.2026 தவக்கால களப்பணித் திறனாய்வு கூட்டம் அமைதியகத்தில் மேதகு ஆயர் ஆனந்தம் தலைமையில் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருட்பணி செபாஸ்தியான் முன்னிலையில் நடைபெற்றது. இதில் 130 பணியாளர்கள் கலந்துகொண்டார்கள்.

✱01 முதல் 26 வரை தவக்காலக் களப்பணி சிவகங்கை, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் கும்பகோணம் ஆகிய மறைமாவட்டங்களில் 79 பங்குகளில் நடைபெற்றன.

✱தவக்காலம் முழுவதும் அமைதியகத்திலும் அருள்சான்று நிலையத்திலும் நற்செய்தி பணியாளர்கள் மேற்கொண்ட தொடர் பரிந்துரை செபம் நடைபெற்றது.

✱தவக்கால தியானங்கள் மற்றும் ஆராதனைகள் பணியாளர்களால் செயலருடன் இணைந்து கீழ்கண்டவாறு நடத்தப்பட்டது.

✱3.3.26 ஆண்டாவூரணி, 06.03.2026 லூத்தரன் சபை, பரமக்குடி, 7.03.26 காளையார்கோவில், கமுதி தொடர் ஆராதனை, 08.03.26 கோட்டையூர், கமுதி. 15.06.26 தஞ்சை 20.3.26 தூத்துக்குடி, 22.6.26 ஏ.ஆர் மங்கலம்.



## ஒரு பணியாளரின் மன்றாட்டு



என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்து விடுவேன்(எசா 25:8) என்ற தந்தையே!

மறைநூல் வாக்கு நிறைவேறிடவும் (1கொரி 15:54), எங்கள் நம்பிக்கை பொருளுள்ளதாகிடவும்(1கொரி 15:14), நீர் இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தீர். சாவுக்குள்ளான அனைவரும் ஒருநாள் உயிர்பெற்றெழுவர் என்ற உண்மையை (உரோ 8:11) உறுதிப்படுத்தவும், சாவு என்ற பகைவனை வீழ்த்திடவும் (1கொரி 15:26), எங்களுக்கு நிலை வாழ்வு நிச்சயம் என்று நாங்கள் நம்பிடவும் (உரோ 8:13) இயேசு கிறிஸ்துவின் வழியாக இந்த வெற்றியைத் தந்திருக்கிறீர். எனவே நிலையாய் நின்று, உறுதியோடிருந்து உமக்காக உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து (1கொரி 15:58) உமது பணியை இன்னும் அதிகமாகச் செய்திடும் மனநிலை தர வேண்டுகிறேன்.

மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் (மாற்கு 1:15)

மனம் மாறுவது என்றால் என்ன? தவறு செய்த குழந்தை அடிவாங்கியதும் இனி இப்படி செய்யமாட்டேன்என்று சொல்லி தனது பெற்றோரிடம் மனம்வருந்துகிறது. காவல் நிலையத்தில் அடி வாங்கிய குற்றவாளி அந்த காவல் அதிகாரியிடம் குற்றத்தை ஒப்புக்கொள்கிறார்.

ஆனால் பாவம் செய்கிற மனிதன் யாரை நோக்கி மனம் திரும்புவது? தன்னைப் படைத்த கடவுளிடம் மனம் திரும்பவேண்டும். அதுதான் உண்மையான மனம் திருப்புதல். இந்த உலகில் இருபதுக்கும் மேற்பட்ட மதங்கள் உள்ளன. எல்லா மதங்களும் மனம் மாற்றம். மனம் திரும்புதல் போன்றவற்றை கற்பிக்கின்றனர். ஆனால் யாரை நோக்கி மனம் திரும்பவேண்டும் என்பதை கூறுவதில்லை. காரணம் மனம் மாறி யாரிடம் செல்லவேண்டும் என்பது பற்றி அவர்களுக்குத் தெரியாது. ஆனால் கிறிஸ்தவம் மட்டுமே மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று பறைசாற்றுகிறது. நற்செய்தியை நம்புகின்ற மனிதர் தன்னைப் படைத்த கடவுளை அறிந்து கொள்கிறார். கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தினார் (யோவா 1:18).

என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும் (யோவா 14:9). நற்செய்தியை நம்புகின்ற மனிதர் பாவமன்னிப்பு உண்டு என்பதை அறிந்து கொள்கிறார். அந்த நற்செய்தி மனிதரை நிலைவாழ்வை நோக்கி வழி நடத்துகிறது. எனவேதான் நம் ஆண்டவர் காலம் நிறைவேறிவிட்டது இறைசாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்றார் (மாற் 1:15). நற்செய்தியை நம்பும்போது இயேசு ஆண்டவர்தான் இறையாட்சி என்பதை புரிந்து கொள்கிறோம். திருமுழுக்கு யோவான் மனம் மாறுவதைக் குறித்து பரிசேயர் சதுசேயரிடம் விரியன்பாம்பு குட்டிகளே வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என்று உங்களிடம் சொன்னவர் யார்? நீங்கள் மனம்மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயலில் காட்டுங்கள் என்று தம்மிடம் வருபவர்களை கடிந்து கொண்டார்; கண்டித்துப் பேசினார் (மாற் 3:7-8). ஆனால் ஆண்டவர் காலத்தைக் குறித்து பேசுகிறார். ஏனென்றால் அவர் காலம் கடந்து வாழ்பவர் (ஏசா 57:15). அவர்தான் காலத்தின் நிறைவாக இருக்கிறார். அவருக்குப் பின் இன்னொரு காலம் இல்லை என்பதை அறிந்து கொள்கிறோம். எனவே கால நிறைவில் வந்துள்ள அவரது இறையாட்சிக்குள் இணைந்து கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை எண்ணிப் பார்ப்போம். அவரது நற்செய்தியைக் கேட்டும் மனம் மாறாத நகரங்கள் மீது சாபத்தைக் கூறினார். கொராசின் நகரே. பெத்சாயிதா நகரே ஐயோ! உனக்குக்கேடு தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோமிற்கும் கிடைக்கும் தண்டனையைவிட உங்களுக்கு கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என்றார் (மத் 11:20-22).

நமது மாற்றம் எவ்வாறு யாரிடம் திரும்பி இருக்கிறது என்பதை எண்ணிப்பார்ப்போம். பனிரெண்டு சீடர்களில் ஒருவரான யூதாசு தான் செய்த தவறை எண்ணி மனம் மாறினார். ஆனால் அந்த மனமாற்றம் தன்னை அழைத்த ஆண்டவரை நோக்கி வராமல் தனக்குப் பணம் கொடுத்த மனிதர்களிடம் சென்றான். தலைமை குருக்களிடமும் மூப்பர்களிடமும் முப்பது வெள்ளிக் காசுகளையும் திருப்பிக் கொண்டு வந்து பலி பாவமில்லாதவரைக் காட்டிக் கொடுத்து பாவம் செய்தேன் என்றான்.

அதற்கு அவர்கள் அதைப்பற்றி எங்களுக்கென்ன? நீயே பார்த்துக்கொள் என்றார்கள் (மத் 27:3-4). அவர்கள் சொன்னது உண்மை. ஏனென்றால் மனம் திரும்பி வருகிற மனிதனுக்கு இன்னொரு மனிதர் பாவ மன்னிப்பு கொடுக்க முடியாது. ஏனென்றால் எல்லா மனிதரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர் (உரோ 3:23). எனவேதான் மனம் திரும்பி வந்த மனிதனுக்கு அவர்களால் ஆறுதல் சொல்ல முடியவில்லை. நீயே பார்த்துக்கொள் என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தை யுதாசின் உள்ளத்தை இன்னும் வேதனைப்படுத்தியது. மூன்றரை ஆண்டுகள் கூடவே இருந்த ஆண்டவரின் அன்பை புரிந்து கொள்ளாமல் வெள்ளிக்காசுகளை கோவிலில் எரிந்துவிட்டு ஓடிப்போய் தூக்குப் போட்டுக் கொண்டான். எத்தனை வேதனைக்குரிய செயல் என்பதை எண்ணிப் பார்ப்போம் (மத் 27:5). இதைப்பற்றி புனித பவுல் நாம் கிறிஸ்துவிடம் கொண்டுள்ள எதிர்நோக்கு இவ்வுலகு வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும் விட இரங்குதற்கு உரியவராய் இருப்போம் என்கிறார் (1 கொரி 15:19).

யூதாசைவிட பெரும்பாவம் செய்த பேதுருவை எண்ணிப் பார்ப்போம். உயிருக்காகப் பழகியவரை எல்லா மனிதர் முன்னிலையிலும் அவரை எனக்குத் தெரியாது என்று ஒரு முறை அல்ல மூன்று முறை மறுதலித்தார். எத்தனை வேதனைக்குரிய செயல். ஆனால் அந்தத் தவறை அவர் உணர்ந்தபோது எந்த மனிதரிடமும் போய் அழவில்லை. மாறாக தன்னை அழைத்த ஆண்டவரை நோக்கிப் பார்த்தார். ஆண்டவரும் பேதுருவை கூர்ந்து நோக்கினார் (லூக் 22:60-61). மனம் மாறி ஆண்டவரை நோக்கிப் பார்த்ததால் ஆண்டவரின் கனிவான பார்வை பேதுருவின் மேல் விழுந்து அவரின் வாழ்வு தலைகீழாக மாறியது. எந்த மனிதர்களுக்கு அஞ்சி தன்னை அன்பு செய்து அழைத்த ஆண்டவரை மறுதலித்தாரோ அதே மனிதர்களிடம் சென்று இவராலே அன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புபெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை என்று முழக்கமிட்டு பறைசாற்றினார் (திப 4:12). இதுதான் உண்மையான மனமாற்றத்தின் வெளிப்பாடு. அவர் அறிவித்த நற்செய்தியைக் கேட்ட மக்கள் உள்ளம் குத்தப்பட்டு ஓரே நாளில் ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஆண்டவர் பக்கம் திரும்பினார்கள். அன்றுதான் உண்மையான திரு அவை தோன்றிய நாள் (திப 2:37-41). அத்தகைய இறை ஆற்றல் பேதுருவுக்கு எவ்வாறு கிடைத்தது? அவரை நம் விண்ணகத் தந்தையையும் நம் ஆண்டவர் இயேசுவையும் அறிந்து கொள்வதன் மூலம் இறைப்பற்றுடன் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் அவர்தம் இறைவல்லமையால் நமக்கு அருளியுள்ளார் என்கிறார் (2 பேதுரு 1:2-3).

இன்றைக்கு கிறிஸ்தவம் சடங்காகச்சாரங்களில் மூழ்கிய மதமாக மாறிவிட்டதால் மனம் மாறி வருபவர்கள் யாரிடம் செல்வது என்பதை அறியாது ஆயனில்லா ஆடுகளைப் போல அலைந்து திரிவதை காண முடிகிறது. பேதுருவின் மீது இருந்த இறை ஆற்றல் நம் மீதும் பொழியப்பட்டிருக்கிறது என்பதை கண்டுணர நம் மனக்கண்கள் திறக்கப்பட ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு நம்மை முழுவதும் அர்ப்பணிப்போம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம் www.arulchandrunilayam.org

தாவீது தனது வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் கடவுளையே நம்பியிருந்தார். ஆகவே. அவரைக் குறித்து 'ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன்: என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்' (திபா 13:22) என்று சான்று பகிர்ந்தார். எதிரிகள் தாவீதின் உயிரைப் பறிக்க வகைதேடிய போதெல்லாம் தாவீதுக்காக ஆண்டவரே போரிட்டுள்ளதைப் பார்க்கிறோம். இறை அருள் ஒன்றே தாவீதுக்குப் போதுமானதாக இருந்தது. ஆகையால்தான். 'ஆண்டவர் என் பக்கம் இருக்க நான் ஏன் அஞ்சவேண்டும்? மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்?' (திபா 118:6) என்று வீர முழக்கமிட்டார்.

பெலிஸ்தியருக்கு எதிராகப் போரிட அணிவகுத்து நின்ற இஸ்ரயேலர் அனைவரும். காத்து நகரைச் சார்ந்த பெலிஸ்திய வீரனான கோலியாத்தைக் கண்டு அஞ்சினர். அவன் உயரம் ஆறரை முழம். அவன் வெண்கலத் தலைக்கவசமும். ஐம்பத்தேழு கிலோ எடையுள்ள வெண்கலத்தாலான மீன் செதிலைப் போன்ற ஒரு மார்புக் கவசமும் அணிந்திருந்தான். கால்களில் வெண்கலக் கவசமும் தோள்களுக்கிடையில் வெண்கல எறிவேலும் அவன் அணிந்திருந்தான். அவனது ஈட்டித் தறிக்கட்டைபோல் பெரிதாயிருந்தது. அவனது ஈட்டியின் முனை ஏழு கிலோ இரும்பால் ஆனது. பார்ப்பதற்கு அச்சம் தரக்கூடிய ராட்சச உருவமுடையவனாக இருந்தான். அவனுக்குப் பின்னால் ஆயிரக்கணக்கான படை வீரர்கள் அணிவகுத்து நின்றனர். சவுலும் இஸ்ரயேலர் அனைவரும் பெலிஸ்தியனைக் கண்டு கலங்கி பெரிதும் அச்சமுற்றனர் (1சாமு17:8-11).

பெலிஸ்தியன் ஒவ்வொருநாளும் இஸ்ரயேலரைப் பழிப்பதைக் கேள்விப்பட்ட தாவீது வாழும் கடவுளின் படைகளைப் பழிப்பதற்கு. விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்தியனாகிய இவன் யார்? எனக் கோபம் கொண்ட தாவீது பெலிஸ்திய மாவீரன் கோலியாத்தையோ. ஆயிரக்கணக்கான பெலிஸ்தியப் படைகளையோ எதைக் கண்டும் அஞ்சாமல். பெரிய யானைக் கூட்டத்திற்கு நடுவே ஒரு இளம் சிங்கம் பாய்ந்து செல்வதுபோல் பெலிஸ்தியரின் படைத்திரளை நோக்கித் தாவீது விரைந்து ஓடினார். அவ்வேளையில். தாவீது பெலிஸ்தியனிடம் 'நீ வாளோடும் ஈட்டியோடும் எறிவேலோடும் என்னிடம் வருகிறாய்! நானோ நீ இகழ்ந்த இஸ்ரயேலின் படைத்திரளின் கடவுளாகிய படைகளின் ஆண்டவர்தம் பெயரால் வருகிறேன்' (1சாமு 17:45) என்று சொல்லி தாவீது தம் பையில் கை வைத்து ஒரு கல்லை எடுத்தார்: அதைக் கவணில் வைத்துச் சுழற்றிப் பெலிஸ்தியனுடைய நெற்றியைக் குறிபார்த்து எறிந்தார். அந்தக் கல்லும் அவனது நெற்றிக்குள் தாக்கிப் பதியவே. அவன் தரையில் முகம் குப்புற விழுந்தான்.

'என்னைக் காக்கும் கேடயமும்
வெற்றி வாளும் ஆண்டவரே'. (இச 33:29)

கோலியாத்து மிகப்பெரிய உருவம் கொண்ட வீரன். உடல் முழுவதும் பாதுகாப்பு கவசங்கள். ஆனாலும். தாவீது கையில் வாளேதும் இன்றிக் கவணும் கல்லும் கொண்டு பெலிஸ்தியனை வீழ்த்திக் கொன்றார். மாவீரன் கோலியாத்து இறந்ததைக் கண்டு பெலிஸ்தியர் படை முழுவதும் சிதறி ஓடியது. படைகளின் ஆண்டவர்

தாவீதோடு இருந்ததால் தாவீது துணிந்து செயல்பட்டார். எதைக்கண்டும் அஞ்சவில்லை. ஆகையால்தான். 'எனக்கெதிராக ஒரு படையே பாளையமிறங்கினும் என் உள்ளம் அஞ்சாது; எனக்கெதிராகப் போர் எழுந்தாலும், நான் நம்பிக்கையோடிருப்பேன்' (திபா 27:3) என்றும் 'என்னைச் சூழ்ந்திருக்கும் பல்லாயிரம் பகைவருக்கு நான் அஞ்சமாட்டேன்' (திபா 3:6) என்றும் கூறி ஆண்டவரின் ஆற்றலால் தொடர்ந்து வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்தார்.

ஒருவர் இறைவனோடு இருக்கும்போது அவர் ஆயிரம் பேருக்குச் சமமாகிறார். மோசேயும். ஆரோனும் இறைவனோடு இருந்ததால் பார்வோனின் பெரும்படையால் எதுவும் செய்ய முடியவில்லை (விப 14:1-31). கிதியோன். சிம்சோன் இவர்களிடம் காணப்பட்ட ஆற்றல் என்ன? மனித ஆற்றலா? எலியாவின் சுட்டுவிரலுக்கு ஆகாபின் அரண்மனை ஆடிப்போனதே! (1 அர 17:1) இவைகளெல்லாம் எப்படி? ஆகவே, இறைவனின் படைக்கு எண்ணிக்கை தேவையில்லை. இறை நம்பிக்கை இருந்தால் போதும். உடல்பலம் தேவையில்லை. உன்னத இறை அருள் ஒன்றே போதும். ஆர்ப்பாட்டம் தேவையில்லை - அர்ப்பணிப்பு மட்டும் போதும். ஆண்டவரின் ஆளுகைக்குள் இருந்து நாம் செயல்படும்போது ஆண்டவர் அனைத்தையும் வெற்றிப் பெறச் செய்வார். ஏனெனில் அவரே நம் வெற்றி.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அலகையின் தலையை கல்வாரிச் சிலுவையில் நசுக்கி நம்மை சுற்றியிருக்கும் எல்லாத் தீமைகளின் பிடியிலிருந்தும் மீட்ட சர்வ வல்லமையுள்ள கடவுள். எல்லா நன்மைகளையும் செய்ய வல்லவர். நாம் ஏன் அஞ்சவேண்டும். நாம் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். கிறிஸ்து நமக்காக இறந்து. உயிருடன் எழுப்பட்டு கடவுளின் வலப்பக்கத்திலிருந்து நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். கடவுள் நம் சார்பில் இருக்கும்போது நமக்கு எதிராக இருப்பவர் யார்? கிறிஸ்துவின் அன்பிலிருந்து எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்? எதுவும் பிரிக்க முடியாது. ஏனெனில். சாவோ. வாழ்வோ. வானதூதரோ. ஆட்சியாளரோ. நிகழ்வனவோ. வருவனவோ. வலிமை மிக்கவையோ. உன்னதத்தில் உள்ளவையோ. ஆழத்தில் உள்ளவையோ. வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது. இவ்வுலகத்தின் தலைவனாலும், நம்பிக்கையற்ற மனிதர்களாலும் நாம் சூழப்பட்டிருந்தாலும், இறை சமூகத்தில் மகிழ்ந்திருக்கும்படி போதுமான அருளும் ஆசீரும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. ஆகையால், நாம் கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு அவரையே உறுதியாகப் பற்றிக் கொள்வதில் தோல்வியடையாமல் வெற்றி கொண்டால். எந்த சூழ்நிலையிலும் நமக்கு ஒரு ஆசீர்வாதமான வெற்றி வாழ்வை அருளிட ஆண்டவர் அருள் நிறைந்தவராக இருக்கிறார். ஏனெனில், அவர் 'யா..வே நிசீ'. இதற்கு எபிரேய மொழியில் அவரே நம் வெற்றி என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால். 'யா..வே நிசீ' நம்மோடு இருப்பதால் நமக்கேதும் குறையில்லை என்று நம்புவோம்.

> 'இயேசு கிறிஸ்து நம் வெற்றி'. (உரோ 8:37)

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்.' (எபே6:16)

நாம் உண்மையான சீடத்துவ வாழ்வு வாழ்வதற்கும், பிற இனத்தார் முன் சான்று வாழ்வு வாழ்வதற்கும் நம்மை அழைத்துச் செல்வது நமது இறை நம்பிக்கை வாழ்வு தான். 'இறைப்பற்றில்லாதவரின் நம்பிக்கை இடிந்துபோம்.'(யோபு 8:13) இறைப் பற்றும் நம்பிக்கையும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல் உள்ளன. இறைப்பற்றுடன் வாழ்பவரால் தான் நம்பிக்கையில் நிலைத்து நிற்க முடியும். நமது பக்தி செயல்பாடுகளின் மூலம் நம்பிக்கையாளர்கள் போல் நாம் காட்டிக்கொண்டிருக்கின்றோம். நம்மையும் பிறரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். நமது வாழ்க்கைச் சூழலில் நமது இறை நம்பிக்கையை மெய்ப்பிக்க வேண்டிய சூழ்நிலைகள் வரும் போது இறைப்பற்றில் ஆழமில்லாததால் நமது நம்பிக்கை யோபு சொன்னது போல இடிந்து விழுந்து தவிடு பொடியாகி விடுகின்றது.

சமீபத்தில் ஒரு கிறிஸ்துவர் இல்லத்தின் இறப்பு நிகழ்வுக்குச் சென்று வந்தேன். அப்போது இறந்தவரைக் குளிப்பாட்டுவதற்காகத் தண்ணீர் கொண்டு வரச் சென்றார்கள். இறந்தவரின் மகன் தோளில் ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்தார். அந்தச் செம்பைச் சுற்றிலும் வெள்ளை நூலில் குறுக்கும் நெடுக்குமாக கட்டப்பட்டிருந்தது. தண்ணீரைக் கொண்டு வந்த பெண்கள் எல்லாருடைய தலையிலும் வேப்பிலை செருகியிருந்தது. ஏனென்றால், இந்தச் சடங்குகளைச் செய்பவர் ஒரு பிற மத சகோதரர் அவர். அவர் சார்ந்திருக்கிற மதத்தில் செய்வதுபோல் செய்கிறார். இதைப் போல நாங்கள் செய்ய மாட்டோம் என்று சொல்லி நம்மால் அதை மறுக்க முடியவில்லை. ஏனென்றால், நம்மிடம் இறைப்பற்று கலந்த நம்பிக்கை இல்லை. நம்மிடம் நம்பிக்கை இருப்பதாக சொல்லிக் கொள்கின்றோம். அதை நமது பக்தி செயல்களிலும் காட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இது போன்ற சூழல்கள் வரும்போது நமது நம்பிக்கையை நம்மால் மெய்ப்பிக்க முடியவில்லை. நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சான்றாக நிற்க முடியவில்லை.

'நீங்கள் குடியிருந்த எகிப்து நாட்டின் வழக்கப்படி செய்ய வேண்டாம். நான் உங்களை அழைத்துச் செல்லும் கானா நாட்டின் வழக்கப்படியும் செய்ய

வேண்டாம். அவர்கள் முறைமையும் வேண்டாம். என் நியமங்களை ஏற்று என் ஆணைகளுக்குப் பணிந்து நடங்கள் நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர் (லேவி18:3,4) இந்த இறை வார்த்தையின் மூலம் ஆண்டவர் சொல்வது என்னவென்று வார்த்தையை உணர்ந்து வாசித்தவர்களுக்குப் புரிந்திருக்கும். அன்று எகிப்தியரும் கானானியரும் செய்தது போல் செய்ய வேண்டாம் என்று சொன்ன ஆண்டவர், இன்று நம்மைச் சுற்றிலும் உள்ள பிற மதத்தினர் செய்வது போல் செய்ய வேண்டாம் என்று நம்மை பார்த்துக் கூறுகின்றார். என் நியமங்களை ஏற்று என் ஆணைகளுக்குப் பணிந்து நடங்கள் என்று கூறுகின்றார். இறைப்பற்றில்லாதவர்களாக இருப்பதால்தான் நம்மிடம் இறை நம்பிக்கை இல்லை. இறை நம்பிக்கை இல்லாததால் தான் இதுபோன்ற வெற்றுச் சடங்குகளில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாமும் மூழ்கிப்போயிருக்கின்றோம்.

திருமண அருளடையாள நிகழ்வுகளிலும் கூட நல்ல நேரம் முடிவதற்குள் தாலி கட்டி விட்டு மறையுரையை வைத்துக் கொள்ளுங்கள் என்று திருவழிபாட்டு நடைமுறைகளைக் கூட மாற்றச் சொல்லுகின்ற கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் நம்புகின்ற நல்ல நேரத்தையும் நல்ல நாளையும் குறித்துக் கொடுத்தது யார்? ஆண்டவரா? திருவிவிலியமா? திருஅவையா? பின்னர் ஏன் யாரோ குறித்துக் கொடுத்த நல்ல நேரத்தையும் நல்ல நாளையும் நம்பி நாம் வாழ்கின்றோம். இறை அனுபவமும், இறைப் பற்றும், இறையச்சமும் இல்லாததால்தான் இப்படி திருவழிபாட்டு நடைமுறைகளைக் கூட மாற்றச் சொல்கின்ற அளவுக்குத் துணிவு பெற்றிருக்கின்றோம். யோபு சொன்னது போல இறைப்பற்று இல்லாததால் நம்மிடம் உள்ள போலியான நம்பிக்கை இடிந்து தவிடு பொடியாகிவிடுகின்றது. அவரது உடனிருப்பையும், பராமரிப்பையும், பாதுகாப்பையும் நம்பாததால் தான் பிற மதத்தினர் செய்வது போல் நாமும் செய்து சான்று இல்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நமது நம்பிக்கையின்மையால் எவ்வாறெல்லாம் எதிர்சான்றாக வாழ்ந்து வந்திருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்த்து மனம் வருந்துவோம்.மறுபடியும் பிறக்கின்ற அனுபவத்தை உயிர்ப்பு விழா பெருவிழாவிலிருந்து பெற்று வாழ்வோம்.

'இறைப்பற்று பெரும் ஆதாயம் தருவதுதான்; ஆனால், மன நிறைவுள்ளவர்களுக்கே தரும். (1திமோ6:6) இறைப் பற்று சாதாரண ஆதாயம் தருவது அல்ல. பெரும் ஆதாயம் தருவது என்பதை அனுபவித்து

அறிந்து கொள்ள வேண்டும். இறைப்பற்று யாருக்கு ஆதாயம் தருவதாக இருக்குமென்றால் இறை நம்பிக்கையால் வரும் ஆசீர்வாதமான மனநிறைவுள்ளவர்களுக்கே தரும் என்பதை நாம் அறிந்து கொள்வோம். அழிந்து போகின்றவைகளுக்காக நிலையானவரை மறந்து போக வேண்டாம். 'நாம் அனைவரும் கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பாக நின்றாக வேண்டும். அப்போது உடலோடு வாழ்ந்த போது நாம் செய்த நன்மைகளுக்குக் கைமாறு பெற்றுக் கொள்ளுமாறு ஒவ்வொருவரின் செயல்களும் வெளிப்படும்' (2கொரி5:10) கண்டிப்பாக நாம் எல்லோரும் ஆண்டவர் இயேசுவின் நடுவர் இருக்கையின் முன் ஒரு நாள் நின்றாக வேண்டும். அப்போது அவர் இரக்கத்தின் ஆண்டவராக அல்ல. நமது செயல்களுக்குக் கைமாறு அளிக்கும் நீதிபதியாக இருப்பார். இறைபற்றுள்ளவர்கள் போல நம்பிக்கை இல்லாமல் நாம் வாழும் வெளிவேடத்தால் என்ன கைமாறு பெற்றுக் கொள்ளப் போகிறோம் என்பதை எண்ணிப் பார்ப்போம். இறைப் பற்றும், இறையச்சமும், இறை நம்பிக்கையும் இல்லாத கிறிஸ்தவ வாழ்வால் நாம் அடையப்போவது என்ன என்பதை காலத்தில் எண்ணிப் பார்த்து நம்பிக்கை வாழ்வின் மூலம் அலகையை எதிர்த்து நிற்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

## திருவிவிலியமும் திருக்குறளும்

இயேசு தம் சீடர்களை நோக்கி 'நீங்கள் நான் யார் எனச்சொல்கிறீர்கள்' என கேட்டார். சீமான் பேதுரு மறுமொழியாக 'நீர் மெசியா. வாழும் கடவுளின் மகன்' என்று உரைத்தார். அதற்கு இயேசு 'யோனாவின் மகனான சீமோனே. நீ பேறு பெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்கு கூறுகிறேன்; உன் பெயர் பேதுரு: இந்த பாறையின் மீது என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிகொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்' என்றார். (மத்.16:15-19)

மேற்கண்ட திருவிலியத்தில் குறிப்பிட்டுள்ள ஆண்டவர் இயேசுவின் கருத்திற்கிணங்க. அதற்கு சான்று பகிரும் வகையில் திருவள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல் (குறள் எண்: 517).

இச்செயலை இக்காரணங்களால் இவன் முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்து அச்செயலை அவனிடத்தில் விடுதல் வேண்டும் என்று கூறுகிறார்.

12 சீடர்களில் பேதுரு குறிப்பிடத்தக்கவர். இவர் இயேசுவின் மீது கொண்ட ஆழமான நம்பிக்கையினால் இயேசு கேட்ட கேள்விக்கு தயக்கமின்றி உடனே சரியான பதிலை அளிக்கின்றார். எனவே ஆண்டவர் இயேசு பேதுருவின் உள்ளத்தை ஆய்ந்தறிந்து அவரை திருச்சபையின் தலைவராக்குகின்றார். ஆகையால் நாமும் ஏற்றுக்கொண்ட நற்செய்திப்பணியை ஏற்றமுடன் செயல்படுத்த ஆர்வமுடன் முனைவோமாக!

- நற்பணி **முத்து ஜூலியானா**. இராம் நகர்.

## இது சாத்தியமா?

களப்பணிக்குச் சென்றிருந்தபோது அவ்வூரில் பெரும்பாலானோர், ஏறக்குறைய 95 சதவீதம் பேரின் குடும்பத்தினர் வெளிநாடுகளில், குறிப்பாக வளைகுடா நாடுகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்ததை அறிந்தோம். குடும்பத்தினர் அனைவரும் கண்ணீர் மல்க பகிர்ந்தது : எங்கள் குடும்பத்தினர் போர்ச்சூழலில் வளைகுடா நாடுகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். கலங்கிப்போயிருக்கிறோம். அவர்களுடைய பாதுகாப்பிற்காக செபியுங்கள்'. அப்போதைக்கு அவர்களுக்கு ஆறுதல் கூறி செபித்துவிட்டு வந்துவிட்டோம்.

லூக்.21:9 ல் போர் முழக்கங்களையும், குழப்பங்களையும் பற்றிக் கேள்விப்படும்போது திகிலுறாதீர்கள். என்று அறிவுறுத்துகிறார் நம் ஆண்டவர்.

'உங்கள் உள்ளங்கள் களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும், அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப் போல் உங்களை சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள். (லூக். 21: 34) என்று இயேசு ஆண்டவர் கூறும் எச்சரிக்கைக்கு செவிமடுத்து பணிந்து வாழ்ந்தால், அவரது திருவுளத்தை ஏற்று, அவர் நமக்கு பணித்த காரியங்களைப் பொறுப்புணர்வோடு செய்து வந்தால், அமைதியோடும், மகிழ்வோடும் வாழ்வது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**. இராம்நகர்

தியாகம் என்றால் பிறருடைய நன்மைக்காகவோ அல்லது உயரிய நோக்கத்திற்காகவோ, தமக்கு பலனோ, மகிழ்ச்சியோ தரும் ஒன்றை அல்லது சொந்த நலனை, கைவிடுதல், விட்டுக்கொடுத்தல், அல்லது துறத்தல் ஆகும். இது அன்பின் மிகுதியினால் உந்தப்பட்டு வருவது. இது ஒரு பொருளாக இருக்கலாம். உணர்ச்சியாக இருக்கலாம், பதவியாக இருக்கலாம், சில நேரங்களில் உயிராகக்கூட இருக்கலாம். நாம் தியாகம் செய்ய முன்வரும் பொருளை வைத்து அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம், இது ஒரு ஆன்மீக அளவுகோலாகவும் உள்ளது. உதாரணமாக ஆபிரகாம் தனது மகனையே கடவுளுக்காகத் தியாகம் செய்ய முன் வந்தார் இது அவர் கடவுளோடு இருந்த நம்பிக்கையின் அளவுகோலாகும். எல்லாவற்றையும் விட அவருக்கு கடவுள்தான் முக்கியம் என உணர்த்தினார். அதே போல் கடவுளும் தனது ஒரே மகனை இந்த உலகத்திற்காக கொடுத்தார். 'தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு டவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16). இது கடவுள் நம்மீது வைத்துள்ள அன்பினால் விளைந்த தியாகமாகும்.

இயேசுகிறிஸ்து நமக்காகச் செய்த தியாகங்களை நினைத்துப் பார்ப்போம்.

**1. இறைநிலை:**

அவர் மூவொரு இறைவனில் ஒருவராக இருந்தபோதும் தனது இறைத்தன்மையை தியாகம் செய்து மனித தன்மையை ஏற்றார் விண்ணகத்தை விடுத்து மண்ணகத்திற்கு வந்தார். 'கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி 2:6-7).

**2 செல்வம்:**

செல்வங்களை படைத்தவர் அவரே அவரால் மீனின் வாயில் இருந்து கூட எந்த நாட்டின் பணத்தையும் எடுக்க முடியும் 5000 பேருக்கும் 4000 பேருக்கும் உணவு கொடுக்க முடியும் இருந்த போதும் அவர் ஏழமை வாழ்க்கையை ஏற்றார். 'நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார்.

அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார் (2 கொரி8:9). உலக அரசுகள் அனைத்தும் தனக்கு தருவதாக அலகை கூறியபோதும் அதை நிராகரித்தார்.

**3. நேரம்:**

இயேசு அதிகாலை எழுந்து தனியாகச் செபித்தார். மக்களுக்கு போதித்து அவர்களை குணமாக்க நிறைய நேரம் செலவிட்டார். இறைவனுடன் இருக்க அவர் அடிக்கடி தனிமைக்கு சென்றார். சீடர்களை உருவாக்க அவர் அதிக நேரம் செலவிட்டார். மக்களின் துன்பத்தை போக்க அவர் நேரத்தை செலவிட்டார். தனக்கென நேரத்தை செலவிடவில்லை.

**4. சுயவசதி:**

வானதூதர்கள் பணிசெய்யக் காத்திருந்தும் கூட அதை அவர் விரும்பாமல் மனிதருக்கு பணிசெய்ய விரும்பி தனது சுகத்தை தியாகம் செய்தார். 'ஏனெனில், மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்' (மாற்கு 10:45) என்றார்.

**5. உணவு**

உணவுக்காகப் பிறரையே சார்ந்து இருந்தார். தனக்கென உணவைப் படைத்திட வல்லமையிருந்தும் அதை அவர் செய்யவில்லை. 40 நாடகள் உணவு தண்ணீர் இல்லாமல் வாழ்ந்தார். உணவாக இறைத்திருவுளம் இருந்தது 'என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு (யோவான் 4:34) என்றார்.

**6. உறவு:**

ஊரையும் சொந்தங்களையும் தனக்கு அடையாளமாகக் கொள்ளாமல் நம்பிக்கையால் வரும் உறவுகளை தனது உறவாகக் கருதினர். 'பின் தம் சீடர் பக்கம் கையை நீட்டி, 'என் தாயும் சகோதரர்களும் இவர்களே. விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்' என்றார் (மத் 12:49.50).

**7. உணர்ச்சி:**

நன்மை செய்த போதும் அவரைப் பழித்து குற்றம் சுமத்தி, ஒரு குற்றவாளியை விட கீழாக நடத்தினர். எலியாவை விட மேலானவராக இருந்தபோதும் அவர் அவர்களை அழிக்க நினைக்கவில்லை. அவர்கள் உணர்ச்சிக்கு பதிலாக

உணர்ச்சி வசப்படவில்லை. 'அவர்கள் பழித்துரைத்தபோது பதிலுக்குப் பழிக்கவில்லை துன்புறுத்தப்பட்டபோது துன்புறுத்தவில்லை.

**8. சுயமரியாதை**

மனிதனாக மற்றவர்கள் கால்பிடிப்பது என்பது தங்களது சுயமரியாதையை கேள்விக்குரியதாக்கும் செயல். தலைவனாக இருப்பவர் தங்களுக்கு கீழ் உள்ளவரின் காலைபிடித்தல் என்பது இதற்கு முன் எங்கும் நடக்காக ஒன்று. ஆனால் இயேசு சுயமரியாயை தியாகம் செய்தார். 'ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் (யோவான் 13:14) என்றார்.

**9. சுயவிருப்பம்:**

அவருக்கு என்று ஒரு விருப்பத்தைக்கூட வைத்துக்கொள்ளாமல் அதையும் தியாகம் செய்து சிலுவை எதிர்கொள்ளும்போது கூட இறைவனுடைய திருவுளத்தையே ஏற்றுக்கொண்டார். 'தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் ஆனாலும், என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறினார் (லூக் 22:42).

**10. உயிர்**

கடைசியில் அவரிடம் இருந்தது அவரது உயிர். மனிதர்களின் மீட்புக்காக இயேசு தன் உயிரையே சிலுவையில் கொடுத்தார். தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவான் 15:13) என்று கூறியவர் தன்னை புறக்கணித்தவர்களுக்காகவும், தன்னை மறுதலித்தவர்களுக்காகவும் தன் உயிரை தியாகப் பலியாக்கினார்.

உயிர்ப்பு விழாவை கொண்டாடும் நாம் இயேசுவின் தியாகத்தில் பங்கேற்கிறேனா? என்று சிந்திப்போம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

இப்ப இல்லாட்டி எப்ப ?

**இழப்பு இன்றி ஆதாயம் இல்லை**
**இறப்பு இன்றி உயிர்ப்பு இல்லை**

-எல்லாரோ ........ **இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

.......... இரத்தம் சிந்துதல் இன்றி பாவமன்னிப்பு இல்லை. எபிரேயர் 9:22

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
| --- | --- | --- |
| 01.4.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல், அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 09.4.26 | நற்பணி வியாகுலம் நற்பணி ஜெயசீலி மகன் முதல் நன்றித் திருப்பலி | செக்காலை |
| 11.4.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 11.4.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம், திரு இருதய ஆண்டவர் கோவில் மாந்தை |
| 12.4.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | பரமக்குடி, காளையார்கோவில், ஓரியூர் புதுக்கோட்டை, கோட்டைக்காடு, இராமநாதபுரம், சிவகங்கை, புதலூர் பட்டுக்கோட்டை, அம்மாபேட்டை |
| 14.4.26 | விரிவாக்க உள்ளுயிர்க் குழுக் கூட்டம் | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 18.4.26 | சட்டமன்றத் தேர்தல் உண்ணா நோன்பு செபம் | வட்டாரங்கள் |
| 18.4.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித லூர்தன்னை கோவில் மாங்களபுரம் |
| 18.4.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியகம், காயாவயல் புனித ஆரோக்கிய அன்னை கோவில் சாயல்குடி, புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம், புனித அடைக்கல அன்னை கோவில் திருமயம், திரு இருதய ஆண்டவர் கோவில் தஞ்சாவூர் |
| 26.4.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித பாத்திமா அன்னை கோவில் திருவாரூர், குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் தூயஆவியார் கோவில் இராஜசிங்க மங்கலம். |

## புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 11.04.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி GMS. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 12.04.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி GMS. ராணி<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் |
| 12.04.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி M. சேவியர்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 12.04.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி J. ரபேக்கா |
| 12.04.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி A. பிரான்சிஸ்சேவியர் |
| 12.04.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 19.04.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி P.அமலோற்பவஆரோக்கியராணி<br>நற்பணி கோ. அம்பிகா எலியஸ் |
| 19.04.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 19.04.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி M. விசுவாசம்<br>நற்பணி A. சகாய தமிழ்செல்வி |
| 26.04.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி S. தைனஸ்மேரி |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது. | **உரோமையர் 8:8** |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 11.04.26 | திரு இருதய ஆண்டவர் கோவில், மாந்தை | நற்பணி A. சகாயராஜா 943569152<br>நற்பணி S. சகாயராணி 9047495319 |
| 12.04.26<br>II | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி தை. அமல்ராஜா 9443983519 |
| 12.04.26<br>II | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | நற்பணி L. ஆரோக்கியசாமி 9150579311<br>நற்பணி A. ஆரோக்கியசாமி 9843323439 |
| 12.04.26<br>II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி 9443157260<br>நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 |
| 12.04.26<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869<br>நற்பணி S. பால்ராஜ் 9789077287 |
| 12.04.26<br>II | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி M. மரிய கிரகோரி 9486965799<br>நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 18.4.26 | லூர்து அன்னை கோவில் மாங்களபுரம் | நற்பணி A. சகாயராஜா 943569152<br>நற்பணி S. சகாயராணி 9047495319 |
| 19.04.26<br>III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | செயலர் 9787967272<br>நற்பணி M. மரிய கிரகோரி 9486965799 |
| 19.04.26<br>III | அடைக்கல மாதா கோவில் திருமயம் | நற்பணி A. சகாயராஜா 943569152<br>நற்பணி M. லூயிஜான்போஸ்கோ 9443503618 |
| 26.04.26<br>IV | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர் | நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ் |
| 26.04.26<br>IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | செயலர் 9787967272<br>நற்பணி A. ஆரோக்கியசாமி 9787037717 |

# புனித ஜூலி பில்லியர்ட் (ஏப்ரல் 08)



ஜூலி பில்லியர்ட், கி.பி. 1751 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 13 ஆம் நாள், பிரான்ஸ் நாட்டில் உள்ள பிக்கார்டி என்னும் இடத்தில் பிறந்தார். ஜூலி, குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளை. சிறு வயது முதலே இவர் மிகவும் பக்தியுள்ள குழந்தையாக வளர்ந்து வந்தார். அதனால் இவர் மிகக் குறைந்த வயதிலே நற்கருணை ஆண்டவரை உட்கொள்ளும் வாய்ப்புப் பேறுபெற்றார்.


ஜூலிக்கு பதினான்கு வயது நடக்கும்போது கற்பு என்னும் வார்த்தைப்பாட்டை தானே எற்றுக்கொண்டு உண்மையாய் வாழ்ந்து வந்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஜூலியின் தந்தை செய்து வந்த வியாபாரம் பெரிய நஷ்டமடைந்தது. இதனால் குடும்பம் மிகவும் நொடிந்துபோனது. இந்தக் கஷ்டத்திலிருந்து மீண்டுவர ஜூலியின் குடும்பத்தாருக்கு வெகு நாட்கள் ஆகிவிட்டது. இப்படி நாட்கள் நகர்ந்து கொண்டிருக்க ஜூலிக்கு 23 வயது நடந்து கொண்டிருக்கும்போது ஜூலியின் தந்தைக்குப் பிடிக்காத ஒருவர் அவர்மீது துப்பாக்கியை வைத்துச் சுட முயன்றார். அதிர்ஷ்டவசமாக ஜூலியின் தந்தை அதிலிருந்து தப்பித்துக் கொண்டார். ஆனாலும் அது தந்த அதிர்ச்சி ஜூலியை நடக்க முடியாமல் செய்தது. இதனால் அவர் படுக்கையிலே காலம் தள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலை உருவானாலும்கூட ஜூலி மனந்தளராமல், இறைவனிடத்தில் இடைவிடாது செபித்து வந்தார். ஜூலிக்கு 50 வயது நடக்கும்போது குருவானவர் ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில் திரு இருதய ஆண்டவருக்கு நவநாள் பக்தி முயற்சிகளை மேற்கொண்டார். நவநாளின் ஐந்தாம் நாளின்போது இவர் திரு இருதய ஆண்டவருக்கு முன்பாக செபித்துக் கொண்டிருக்கும்போது இவர் கால் குணமாகி நடந்தார் இந்தன்பிறகு இவர் 1803 ஆம் ஆண்டு தனக்கு நெருக்கமாக இருந்த ஒருசில சகோதரிகளின் உதவியுடன் புதிதாக ஒரு சபையை ஏற்படுத்தினார். இந்த சபையின்மூலம் இவர் பல ஏழை எளிய குழந்தைகளுக்கு கல்வி அறிவு புகட்டி வந்தார். அது மட்டுமல்லாமல் பல இடங்களில் துறவு மடங்களைத் துவக்கி ஆன்மீக எழுச்சி உருவாகக் காரணமாக இருந்தார்.

இந்தக் காலக் கட்டத்தில்தான் பிரஞ்சுப் புரட்சி உருவானது . இதனால் திருச்அவைக்கு அச்சுறுத்தலான சூழ்நிலை ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையிலும் ஜூலி மனந்தளராமல் ஆண்டவருடைய பணியைத் திறம்படச் செய்து வந்தார் இப்படிப் பல்வேறு பணிகளை ஓய்வின்றிச் செய்துவந்த ஜூலி உடல்நலம் குன்றி கி.பி. 1816 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவருக்கு 1969 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுலால் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது.

கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் : மனந்தளராது இருத்தல்

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




ஆலோசனை (Counselling) துறையில் "Encouraging" (ஊக்குவித்தல்) என்பது மிகவும் முக்கியமான Micro Skill (சிறு திறன்) ஆகும். கீழே இந்த தலைப்பை விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகிறேன்.

ஆலோசனையில் (Counselling) ஊக்குவித்தல்

Micro Skill of Encouraging (ஊக்குவிக்கும் சிறு திறன்)

1. **அறிமுகம்**

ஆலோசனை என்பது ஒருவரின் மனஅழுத்தம், சிக்கல், குழப்பம், அல்லது வாழ்க்கை பிரச்சினைகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவும் ஒரு வழிகாட்டும் செயல்முறை ஆகும். ஆலோசனை செய்பவர் (Counsellor) பல சிறிய திறன்களை (Micro Skills) பயன்படுத்தி ஆலோசனை பெறுபவரை (Client) பேசவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறார்.

இந்த Micro Skills-களில் ஒன்றாக Encouraging (ஊக்குவித்தல்) இருக்கிறது. இது ஆலோசனையில் மிகவும் அடிப்படையான மற்றும் முக்கியமான திறனாகும்.

2. **Encouraging என்றால் என்ன?**

Encouraging என்பது ஆலோசனை பெறுபவரை தொடர்ந்து பேசவும், தனது உணர்வுகள் மற்றும் அனுபவங்களை பகிரவும் ஊக்குவிப்பது ஆகும்.

இதன் மூலம், Client தன்னை பாதுகாப்பாகவும் புரிந்துகொள்ளப்பட்டதாகவும் உணர்கிறார்.

அவர் தன்னம்பிக்கையுடன் திறந்த மனதுடன் பேச ஆரம்பிக்கிறார்.

தனது சிந்தனைகள் மற்றும் உணர்வுகளை தெளிவாக வெளிப்படுத்த முடிகிறது.

Encouraging என்பது பெரிய ஆலோசனைகள் கொடுப்பது அல்ல; மாறாக சிறிய வார்த்தைகள், உடல் மொழி, முகபாவனை போன்றவற்றின் மூலம் Client-ஐ தொடர்ந்து பேச ஊக்குவிப்பதாகும்.

### 3. Encouraging-ன் நோக்கம்

Counselling-ல் Encouraging பயன்படுத்தப்படுவதற்கான முக்கிய நோக்கங்கள்:

Client-ஐ தொடர்ந்து பேச ஊக்குவிப்பது

Client-ன் அனுபவங்கள் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்த உதவுவது

Client-க்கு அவன் பேசுவது முக்கியம் என்ற உணர்வை ஏற்படுத்துவது

ஆலோசகர் கவனமாக கேட்கிறார் என்பதை காட்டுவது

Client-ன் தன்னம்பிக்கையை அதிகரிப்பது

### 4. Encouraging எப்படி செய்யப்படுகிறது?

Encouraging பல வழிகளில் செய்யப்படுகிறது. அவை:

#### 1. குறுகிய வார்த்தைகள் (Minimal Verbal Encouragement)

Counsellor சிறிய வார்த்தைகளைப் பயன்படுத்தி Client-ஐ தொடர்ந்து பேச ஊக்குவிக்கிறார்.

உதாரணங்கள்:

"சரி... தொடருங்கள்."

"அப்படியா?"

"நான் கேட்கிறேன்..."

"அதற்கு பிறகு என்ன நடந்தது?"

"பரவாயில்லை... சொல்லுங்கள்."

இந்த வார்த்தைகள் Client-க்கு நான் கவனமாக கேட்கிறேன் என்ற உணர்வை தருகின்றன.

#### 2. உடல் மொழி (Body Language Encouragement)

சில நேரங்களில் வார்த்தைகள் இல்லாமல் கூட ஊக்குவிக்கலாம்.

உதாரணம்:

தலை அசைத்தல் (Nodding)

கண் தொடர்பு (Eye contact)

சிரிப்பு

முன்னே சாய்ந்து கேட்பது

இந்த உடல் மொழிகள் Client-க்கு Counsellor உண்மையாக ஆர்வமாக இருக்கிறார் என்பதை காட்டுகின்றன.

#### 3. உணர்வை ஏற்றுக்கொள்வது (Acceptance)

Client சொல்வதை குறை சொல்லாமல் ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியம்.

உதாரணம்:

"உங்களுக்கு அது மிகவும் கஷ்டமாக இருந்திருக்கலாம்."

"அது ஒரு கடினமான அனுபவமாக இருக்கிறது."

"நீங்கள் உணர்வது இயல்பானது."

இதனால் Client தனது உணர்வுகளை வெளிப்படுத்த அஞ்சாமல் பேச முடியும்.

### 4. தொடர்ச்சியான கேள்விகள் (Prompting)

Client பேசும்போது சிறிய கேள்விகள் மூலம் மேலும் விளக்க ஊக்குவிக்கலாம்.

உதாரணம்: "அது எப்போது நடந்தது?"
"அது உங்களுக்கு எப்படி உணர வைத்தது?"
"அந்த நேரத்தில் நீங்கள் என்ன நினைத்தீர்கள்?"

இது Client-ன் அனுபவத்தை மேலும் தெளிவாக புரிந்து கொள்ள உதவும்.

### 5. Encouraging-ன் முக்கியத்துவம்

Counselling-ல் Encouraging மிகவும் முக்கியமானது, ஏனெனில்:

Client-க்கு நம்பிக்கை உருவாகிறது
Client திறந்த மனதுடன் பேச ஆரம்பிக்கிறார்
Counsellor-க்கும் Client-க்கும் இடையே நல்ல உறவு (rapport) உருவாகிறது
பிரச்சினையின் உண்மையான காரணத்தை கண்டறிய உதவுகிறது

### 6. ஒரு எளிய உதாரணம்

ஒரு மாணவன் Counsellor-ஐ சந்தித்து பேசுகிறான்.

மாணவன்: "எனக்கு பள்ளியில் நண்பர்களுடன் பழக மிகவும் சிரமமாக இருக்கிறது."

Counsellor: "அப்படியா… அதைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல முடியுமா?"

மாணவன்: "அவர்கள் என்னை கவனிக்கவே இல்லை என்று நினைக்கிறேன்."

Counsellor: "அது உங்களுக்கு எப்படி உணர வைத்தது?"

இந்த மாதிரி Encouraging பயன்படுத்தும்போது மாணவன் தொடர்ந்து தனது உணர்வுகளை பகிர்வான்.

### 7. நல்ல Encouraging செய்ய வேண்டிய வழிமுறைகள்

Counsellor கவனிக்க வேண்டியவை:

Client பேசும்போது இடைமறிக்கக்கூடாது
விமர்சிக்கக்கூடாது
அவசரமாக ஆலோசனை தரக்கூடாது
Client-ன் உணர்வுகளை மரியாதையுடன் ஏற்க வேண்டும்

Encouraging என்பது ஆலோசனையில் மிகவும் முக்கியமான Micro Skill ஆகும். இது Client-ஐ திறந்த மனதுடன் பேச ஊக்குவிக்கிறது. அவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள உதவுகிறது. மேலும் Counsellor மற்றும் Client இடையே நம்பிக்கை உறவை உருவாக்குகிறது.

ஒரு நல்ல ஆலோசகர் கவனமாக கேட்பவர், புரிந்து கொள்பவர், ஊக்குவிப்பவர் ஆக இருக்க வேண்டும். Encouraging திறனை சரியாக பயன்படுத்தினால் ஆலோசனை செயல்முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**ஆசை போட அரை நிமிடம் :**

"ஊக்குவிக்கும் திறன் உள்மனதை தூண்டுகிறது"

சகோ. S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.
மனநல ஆற்றுப்படுத்துநர். பரமக்குடி.

## என்னை மன்னியும்

- ஆண்டவர் உனக்கு பக்க துணையாய் இருப்பார். உன் கால் கண்ணியில் சிக்காதபடி உன்னைக் காப்பார். என்ற வாக்குறுதியை மறந்து கடவுளின் உடனிருப்பபயும். பாதுகாப்பையும் உணராமல் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (நீமொ 3:26).
- மனமுவந்து நீங்கள் எனக்கு இணங்கி நடந்தால் நாட்டின் நற்கனிகளை உண்பீர்கள் என்பதை அறிந்தும் கடவுளின் வார்த்தைகளுக்கும் கட்டளைகளுக்கும் பணிந்து நடக்காமல் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (எசா 1:19).
- உன்மீது அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்தவர் மீது அன்புகூர்வாயாக. என்பதை அறிந்தும் அடுத்திருப்வர்களுக்கு அன்பு கூர்வதற்குப் பதிலாக எதிரியாக பாவித்து பகைமையுடன் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (மத் 12:31).
- உம்முடைய விதிமுறைகளை நான் கடைப்பிடிக்க என் நடத்தை உறுதியுள்ளதாய் இருந்தால் எவ்வளவோ மேல் என்பதை மறந்து உம்முடைய கட்டளைகளின்படி நடக்க உறுதியற்று ஒழுக்கமற்று வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 119:5).

நற்பணி S.P. **சவரிமுத்து**. இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- சவால்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அருள்பணியாளர்களுக்காக
- அருள்பணியாளர்கள் தங்கள் அர்ப்பண வாழ்வாலும். தூய வாழ்வாலும். கிறிஸ்துவின் பணியாளராகச் சான்றுடன் வாழ்ந்திட
- தேவ அழைத்தல் பெருகிடவும். குடும்பங்கள் தியாகத்துடன் குழந்தைகளை இறைபணிக்கு வழங்க
- மேற்கு ஆசிய பகுதிகளில் நடத்துகொண்டிருக்கும் போர் சூழல் மாறி அமைதி நிலவ
- தமிழ்நாடு. மேற்கு வங்காளம். பாண்டிச்சேரி. கேரளா மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் நடைபெறும் சட்ட மன்ற தேர்தல் நேர்மையுடனும் அமைதியுடனும் நடைபெற
- கத்தோலிக்கர்களின் நம்பிக்கை வாழ்வு. இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தில் ஆழம்பெற

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- குடும்பத்தில். ஊரில். அன்பியத்தில். பங்கில். பணிக்குழுவின் அமைதியை உருவாக்கும் கருவிகளாகச் செயல்படல்.



# தவக்கால களப்பணிகள்

படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **1 கொரிந்தியர் 14-16 அதிகாரங்களுக்குள்**












**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com